திருமுருகாற்றுப்படையில் வேலன் வெறியாட்டும் நகர் வழிபாடும் உணர்த்தும் சமூகப் பிரிவினைகள்

முனைவர் ச. கண்மணி கணேசன்

Social Divisions revealed in the cults of Velan Veriyattu and Nakar Worship perceived in "Thirumurukaarruppadai"

Dr. S. Kanmani Ganesan

முன்னாள் முதல்வர் மற்றும் தமிழ்த் துறைத்தலைவர், ஸ்ரீகாளீஸ்வரி கல்லூரி, சிவகாசி, தமிழ்நாடு. இந்தியா

Formar Principal and HOD of Department of Tamil, Srikaliswari College, Sivakasi,

Tamil Nadu. India. E mail: kanmanitamilskc@gmail.com

ஆய்வுச்சுருக்கம்

திருமுருகாற்றுப்படையில் இடம்பெறும் வேலன் வெறியாட்டையும் நகர் வழிபாட்டையும் ஒப்பிட்டு, அவற்றில் பொதிந்திருக்கும் சமூகப் பிரிவினைகளை வெளிக்கொணர்வது இக்கட்டுரையின் நோக்கமாகும். தொகையிலக்கியக் காலச் சமூக வரலாற்றைத் தெளிவாக அறிய இவ் ஆய்வு தேவையாகிறது. பண்டைத் தமிழ்ச் சமூகத்தின் பன்மைத்தன்மை இவ்ஒப்பீட்டு ஆய்வால் தெளிவுறுகிறது. திருமுருகாற்றுப்படையில் அடி.190-217& 227-248 ஆகிய இரு பாடற்பகுதிகள் மட்டும் முதல்நிலைத் தரவுகளாக அமைய; பிற தொகைநூல் செய்திகள், உரையாசிரியர், ஆய்வாளர் கருத்துகள் ஆகியன துணைநிலைத் தரவுகளாம்.

தேடுசொற்கள்: வெறியாட்டு, நகர், வேலன் தோற்றம், நகரில் பின்பற்றிய வழிபாட்டு முறை, திணைமாந்தர் வழிபட்ட முறை, வேளாளர் வழிபாட்டு முறை.

Abstract

The aim of this research article is to reveal the social divisions perceived in the two different cults named Velan Veriyaattu and Nakar Worship. This comparison is needed to decipher the social history of the early Tamils. The multiplicity rooted deeply in the early Tamil society is brought out to focus by this comparative study. The specific lines 190-217 and 227-248 in Thirumurukaarruppadai serve as the primary data. The other hymns of the anthologies and the opinions of the commentators and researchers serve as secondary data.

Keywords: *Veriyaattu, Nakar, Appearance of velan, Cult of Thinaimaanthar, Cult followed in nakar, Cult of velaalar*

....

முன்னுரை

திருமுருகாற்றுப்படையில் தமிழகத்தில் வாழ்ந்த அரசர், அந்தணர், திணைமாந்தர் எனப் பல திறத்தோரது வழிபாட்டு முறைகள் இடம்பெற்றுள்ளன. அவற்றுள் வேலன் வெறியாட்டையும் நகர் வழிபாட்டையும் மட்டும் ஒப்பிட்டு, அவற்றில் பொதிந்திருக்கும் சமூகப் பிரிவினையை வெளிக்கொணர்வது இக்கட்டுரையின் நோக்கமாகும். பண்டைத் தமிழகத்தில் தொழில் அடிப்படையிலான மக்கட்பிரிவுகள் மட்டுமின்றி வழிபாட்டு அடிப்படையிலான மக்கட் பிரிவுகளும் இருந்தன என்பதைத் திருமுருகாற்றுப்படை மூலம் நிறுவ இயல்கிறது.

இவ்வொப்பீட்டு ஆய்விற்குத் திருமுருகாற்றுப்படையின் அ.190-217& 227-248 ஆகிய இரு பாடற்பகுதிகள் மட்டும் முதல்நிலைத் தரவுகளாக அமைய; பிற தொகைநூல் செய்திகள், உரையாசிரியர், ஆய்வாளர் கருத்துகள் ஆகியன துணைநிலைத் தரவுகளாம்.

'நகர்'- விளக்கம்

பண்டைத் தமிழகத்தார் சென்று வணங்கிய பல வழிபாட்டு இடங்களுள் 'நகர்' ஒரு வகையினது ஆகும். அது ஆட்சியில் இருப்போர் தமக்குச் சொந்தமான இடத்தில் பொதுமக்கள் வழிபட ஏதுவாகக் கட்டிப் புரந்ததாகும். குன்றுகளில் ஆண்ட குறுநில மன்னர் மக்களுக்காக எழுப்பிய அகன்ற வழிபாட்டிடங்களை 'முருகாற்றுப்படுத்த உருகெழு வியன்நகர்' என நக்கீரர் கூறுகிறார் (திருமுரு.248).

நக்கீரர் முருகனிடம் ஆற்றுப்படுத்துங்கால் திருப்பரங் குன்றத்தைத் தலைமைப்படுத்தித் தொடங்குகிறார். கூடல் குடவயின்; அதாவது மதுரைக்குத் தென்மேற்கில் சுனையுடன் கூடிய குன்றில் முருகன் எழுந்தருளியுள்ளான் என்கிறார் (மேற்.67-77). இது இன்றைய திருப்பரங்குன்றமாகும். அக்குன்றின் குகைக்கோயிலில் முருகன் திருவுருவம் இன்றும் வழிபாட்டில் உள்ளது. முருகன் உருவம் அமைந்த அழகிய அம்பலத்தை 'நகர்' என்றே குன்றம்பூதனார் விதந்தோதுகிறார்.

"ஞ் நின் குன்றத்து
எழுதெழில் அம்பலம் காமவேள் அம்பின்
தொழில் வீற்றிருந்த நகர்" (பரி.18)

என்பதால் 'காமன் மலர்க்கணைகளால் மக்கள் மனதில் விருப்பம் மேலும்மேலும் எழுவது போன்று திருப்பரங்குன்றக் குகையில் முருகனின் தோற்றம் விருப்பத்தைப் பெருக்கக் கூடியது' என்பது பொருளாகிறது. நப்பண்ணனார் இதே முருகனைப் பாடுங்கால்; பாண்டிய வேந்தன் தன் உரிமை மகளிர், அமைச்சர், நாட்டு மக்கள், தலைநகரத்து மக்கள், அனைவரோடும் சேர்ந்து மலைவலம் வந்த காட்சியைத் திங்கள் மண்டிலம் மேருமலையை வலம் வந்தமைக்கு ஒப்பிடுகிறார். அவ்விடத்து;

"... நெடியோய் நீமேய
கடிநகர் சூழ்நுவலுங்கால்" (பரி.19)

எனக் குன்றத்துக் குகையை 'நகர்' என்றே சுட்டுகிறார். பலராமன் எழுந்தருளிய,

"மேழி வலனுயர்த்தோன் வெள்ளை நகரமும்" (ஊர்காண்.9)

பற்றிச் சிலப்பதிகாரம் குறிப்பிடுகிறது. எனவே பாண்டிய வேந்தன் மக்கள் வழிபட ஏதுவாகத் திருப்பரங்குன்றக் குகையில் அமைத்து வணங்கிய வழிபாட்டிடம் 'நகர்' என முடிவு செய்ய இயல்கிறது.

நகரி' என்ற சொல்லுக்குக் கழகத் தமிழகராதி 'சர்க்கார்க்கு உரிய புறம்போக்கு' எனப் பொருள் தர (ப.588); திருமகள் தமிழகராதி 'நகர்', 'அரசுக்குச் சொந்தமான புறம்போக்கு' என இரு பொருள்களைத் தருகிறது (ப.613). இதனால் நகர் என்ற சொல் அரசுக்குச் சொந்தமான நிலத்திற்கு ஈடானது என்பது ஒருதலை. பிங்கலம் நகர்படு திரவியம் ஐந்தில் ஒன்று வேந்தன் என்கிறது (தமிழ் நிகண்டுகள், ப.312) உரிச்சொல் நிகண்டும் அங்ஙனமே நகர்படு திரவியம் ஐந்தில் ஒன்று அரசன் என்கிறது (தமிழ் நிகண்டுகள், ப.490) இதனால் ஆட்சியில் இருப்பவர் ஊர்ப் பொதுஇடத்தில் மக்களுக்காகக் கட்டிய வழிபாட்டிடம் நகர் எனப்பட்டமை உறுதி ஆகிறது.

இருவகை வழிபாட்டிலும் இடம்பெறும் பொதுச்செய்திகள்

வேலன் வெறியாட்டு குன்றுதோறும் நிகழ்ந்தது. நகர் வழிபாடும் குளிர்ச்சி பொருந்திய மலைகளில் நடந்தது (திருமுரு.217&238). இருவகை வழிபாடுகளிலும் முறையே வேலனும் குறமகளும் தெய்வமேறி ஆடினர் (மேற்.190-217& 244-248). இருவகை வழிபாடுகளிலும் கோடு ஊதினர் (மேற்.209&246); சேவல் கொடி ஏற்றினர்.

வேலன் வெறியாட்டு சேவல்கொடி (மேற்.210-211)

என்று சுட்ட; நகர் வழிபாட்டில் ‘ஆண்டலைக்கொடி’ (மேற். 227) என்ற பெயர் உளது. நச்சினார்க்கினியர் ‘மனித முகமும் பறவை உடலும் கொண்ட உருவம் என்று விளக்கம் சொல்கிறார் (பத்துப்பாட்டு தொகுதி-1, 2007. திருமுரு. ப.105). இது வடஇந்தியாவின் தாந்திரிக வழிபாட்டில் தீபாவளித் திருநாளுடன் தொடர்புறும் ஆந்தை உடல் கொண்ட கின்னரர் வடிவம் ஆகும். முருகன் வழிபாட்டிற்கும் இதற்கும் தொடர்பேதும் இல்லை; ஆதலால் இக்கருத்தை ஏற்க வேண்டிய தேவையில்லை. பொ.வே.சோமசுந்தரனார் ‘தலைமை சான்ற கோழிக்கொடி’ என்றே பொருள் உரைக்கிறார் (மேற்.).

வேறுபாடுகள்: வழிபாடு நிகழ்த்தியோர் தோற்றம்

வெறியாடிய வேலன் பச்சிலைக்கொடியால் சாதிக்காய், தக்கோலக்காய், காட்டுமல்லி, வெண்கூதாளம் ஆகியவற்றைச் சேர்த்துக் கண்ணியாகக் கட்டி அணிந்து இருந்தான். தொடியணிந்த தோளினனாய்ச் செவ்வாடையுடன் அவனது மருங்கில் கச்சையாகக் கட்டியிருந்த துகில் நிலத்தைத் தோய்ந்தது. நெடிய தோற்றத்துடன் கழல் அணிந்த செய்யனாய், அசோகந்தளிரைக் காதில் செருகியதோடு, வெட்சிமாலையும் சூடியிருந்தான் (மேற்.190-208). நகர்வழிபாட்டை நிகழ்த்தியவன் முரண்பட்ட வண்ணம் கொண்ட இரண்டு ஆடை அணிந்து செந்நூல் காப்புக் கட்டி இருந்தான் (மேற்.அ.230-231).

முரண்பட்ட வண்ணம் கொண்ட இரண்டு ஆடைகளில் ஒன்று உள்ளாடை என்கிறார் பொ.வே.சோமசுந்தரனார் (மேற்.ப.106). ஆனால் மேலாடை, இடையிலணியும் ஆடை என்று பொருள் கொள்ளும்போது தான் அவை முரண்பட்டுத் தோன்றின எனும் கருத்துப் பொருந்துகிறது.

வழிபட்ட முறை

வெறியாட்டில் வேலன் சுற்றத்துடன் சேர்ந்து கள்ளருந்திக் களிப்போடு மகளிருடன் சேர்ந்து குரவை அயர்கிறான். நகர் வழிபாட்டிலோ கள்ளுக்கும், பெண்களோடு சேர்ந்தாடும் குரவைக்கும் இடமில்லை. ஆனால் களம் அலங்கரிக்கப்பட்டு இருந்ததுடன்; நெய், ஐயவி, மணப்புகை; மணியிசை, இசைக்கருவிகள், முருக வாழ்த்துப் பாடல்கள், குறத்தி ஆடிய ஆரவாரம்; பசுமஞ்சள் தெளித்தல்; மலர்கள், வெண்பொரி தூவல்; குருதியோடு வெள்ளரிசி கலந்து படையல் இடுதல், காப்புக் கட்டுதல், பிறர் கேட்காதபடி வேண்டுதல் முதலியன நகர்வழிபாட்டில் மட்டுமே காணப்படுகின்றன.

வேலன் பல சிறிய இசைக்கருவிகளை இசைத்தான். கிடாயும், மயிலும் அவனுடன் இருந்தன. மூங்கில் குழாயில் புளிக்க வைத்த தேனாலான கள்ளைத் தன் சிறுகுடிச் சுற்றத்தோடும் சேர்ந்து உண்டான். அக்களிப்போடு பெண்களுக்குத் தலைக்கை தந்து, தொண்டகச் சிறுபறை முழங்கக் குரவையாடினான். வெறியாட்டுத் தொடர்ந்தது (மேற்.அ.190-216).

நகர்களில் நெய்யோடு ஐயவி அப்பினர்; கொழுமலர் சிதறினர்; சிவந்த நூலைக் கையில் காப்பாகக் கட்டினர்; வெண்பொரி சிதறினர்; கொழுவிய கிடாயினை வெட்டி அதன் குருதியோடு தூய வெள்ளரிசியைக் கலந்து பலியாக இட்டனர்; பல பிரப்பு இட்டனர்; பசுமஞ்சளோடு பிற பல மணப்பொருட்களைத் தெளித்தனர்; செவ்வலரி மாலையையும், குளிர்ச்சி பொருந்திய பிற நறுமலர் மாலைகளையும் இணை ஒக்க அறுத்துத் தொங்க விட்டனர்; முருகனின் வாகனமாகிய பிணிமுகத்தையும் எழுந்தருளிய பிற நகர்களையும் வாழ்த்தினர்; நறும்புகை காட்டினர்; குறிஞ்சிப்பண் பாடினர்; பல்வேறு இசைக் கருவிகளையும் மணியோடு முழக்கினர்; தம் வாயினின்று ஒலி எழாதவாறு இறைஞ்சினர்; இறைப்பொருள் பற்றி முரண்பட்ட கருத்துடையோர் அஞ்சும் படியாகக் குறமகள் மேல் முருகன் அருள் வந்திறங்க அவள் ஆடினாள் (மேற்.அ.227-249).

வேளாளரை அடையாளம் காட்டும் வழிபாட்டு முறை வெண்பொரியும் வெள்ளரிசியும் படைப்பது குறுநில மன்னராய் ஆண்ட வேளாளரை அடையாளம் காட்டுகிறது. இவ்வழிபாட்டு முறை வேளிர் பற்றிய செய்திகளில் மட்டுமே காணப்படுகிறது.

குறுநில மன்னன் நாடனே

“பெருங்கல் நாடன் பேகன்” (சிறு.87),

“நளிமலை நாடன் நள்ளி” (சிறு.107),

“மலைகெழு நாடன் மாவேள் ஆஅய்” (புறம்.135),

“கான்கெழு நாடன் கடுந்தேர் அவியன்” (புறம்.383),

“மலைகெழு நாடன் கூர்வேல் பிட்டன்” (புறம்.170).

மேற்சுட்டிய பாடலடிகளில் பேகன், நள்ளி, ஆஅய், அவியன், பிட்டன் ஆகிய மன்னர் நாடன் என்று

அழைக்கப் பெறுகின்றனர். எனவே ஒவ்வொரு குறுநில மன்னனும் நாடன் என்பது உறுதி ஆகிறது.

நாடன் நன்செய்யில் உழுவித்த வேளாளனே

குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் ஆகிய நானிலங்களிலும் நீர்வளம் மிகுந்த நன்செய் ஆகிய நாடுகளில் நெல் வேளாண்மைக்காக நாடன் உழுவித்தான்.

"நாடெனும் பேர் காடாக" (மது.156)

"காடாகி விளியும் நாடு" (புறம்.52)

"காடு என்றா நாடு என்றாங்கு" (புறம்.166)

"நாடா கொன்றோ காடா கொன்றோ" (புறம்.187)

"காடு முன்னினரே நாடு கொண்டோரும்" (புறம்.359)

ஆகிய பாடல் தொடர்களில் காட்டிற்கு உரிய எதிர்பதமாக நாடு அமைவதால் நாடு நன்செய் வேளாண்மைக்கு உரிய நிலப்பரப்பு என்பது உறுதி ஆகிறது.

'கல்நாடன்' (பத்துப்பாட்டு தொகுதி நீ, 2007. சிறு.ப.3, அ.87), 'மலைநாடன்' (சிறு.107), 'வரை நாடன்' (பெரு.103), 'குன்றுகெழு நாடன்' (குறி.199), 'குறும்பொறை நாடன்' (ஐங்.183), 'சாரல் நாடன்' (அகம்.328) ஆகிய தொடர்கள் குறிஞ்சி சார்ந்த நாடனையும்; 'கான் கெழு நாடன்' (நற்.61), 'புறவு அணி நாடன்' (ஐங்.405), 'புன்புல நாடன்' (ஐங்.421), 'வன்புல நாடன்' (ஐங்.469) ஆகியன முல்லை சார்ந்த நாடனையும்; 'கடல் நாடன்' என்ற தொடர் (மது.524) நெய்தல் சார்ந்த நாடனையும் 'யாறுஞ் நாடனை' (குறு.271) எனும் தொடர் மருதத்து நாடனையும் குறிக்கின்றன.

"முந்நூறூர்த்தே தண்பறம்பு நன்னாடு
முந்நூறு ஊரும் பரிசிலர் பெற்றனர்" (புறம்.110);

எனக் கபிலர் பாரிவேளின் நாடு முந்நூறு ஊர்களை உடைய பறம்பு என்றும்; பாணரும் பொருநரும் கூத்தரும் அவ் ஊர்களைப் பரிசாகப் பெற்றனர் என்றும் பாடி இருக்கிறார். தாம் பெற்ற நிலத்தில் உழுது; தமது பாரம்பரியமான புன்செய் வேளாண்மையும் பாரிக்காக நெல்வேளாண்மையும் செய்தனர் அத் திணைமாந்தர். அவர் விளைத்த வரகு, தினை, எள், அவரை பற்றிப் புறம்.120 பேசுகிறது. 'வயலக நிறையஞ் நாடே' எனப் புறம்.117 பாரியின் வயல்வளம் பேசுகிறது. வேந்தர் முற்றுகையின் போது; 'சேய்நின்று செழுஞ்செய்ந் நெல்லின் விளைகதிர் கொண்டுஞ் ஆம்பல் மலரொடு கூட்டி' (அகம். 78) அட்டு உண்பித்தான் என்பதாலும்; அவன் நெல் வேளாண்மைக்கென உழுவித்தமை உறுதி ஆகிறது.

நெடுவேள் ஆதன் என்ற குறுநில மன்னனது மாளிகை கடல் நடுவே மிதக்கும் கப்பலைப் போல் வயல்களுக்கு இடையில் காட்சி அளித்தமை; அவனை நெல் வேளாண்மைக்கு உழுவித்தவன் எனக் காட்டுகிறது (புறம்.338).

உறந்தைக்குக் கிழக்கில் ஆண்ட நெடுங்கை வேளுக்கு வேளாண்மையில் துணையாக இருந்து உழுத பிடவூர் கிழான் மகன் பற்றிப் புறம்.395 பாடியுள்ளது.

வேங்கட நாடனைப் புகழும் கரும்பனூர் கிழான் தன் தலைவனுக்காக நெல் வேளாண்மையில் உழுதவன் ஆதலால்; வறட்சிக் காலத்தில் புன்செய்ப் பயனையும் வளமிகுந்த காலத்தில் நெற்பயனையும் ஈந்து புகழ் கொண்டான் (புறம்.381, 384).

புறநானூற்றில் உள்ள இருபது மகட்பாற்காஞ்சிப் பாடல்களுள் பதின்மூன்று பாடல்கள் நெல்வேளாண்மை செய்த மன்னராகிய வேளிர் வேந்தர்க்கு மகண்மறுத்ததை உரைப்பனவாய் (புறம்.337, 338, 339, 340, 341, 342, 344, 345, 348, 351, 352, 353, 354) உள்ளமையும் அவர்கள் உழுவித்த வேளாளர் என அடையாளம் காட்டுகிறது. நச்சினார்க்கினியர் மன்னரை வேளாளர் எனச் சுட்டுவதுடன் உழுவித்தோர், உழுதோர் என்ற பாகுபாடு குறித்தும் பேசுகிறார் (தொல்காப்பியம் பொருளதிகார மூலமும் நச்சினார்க்கினியர் உரையும்-பகுதி மி, ப.80, சூத்.30)

வேளிர் தமிழகம் போந்து குடியேறிய வேளாளர் என்பது தொன்மவியல் அடிப்படையில் நிறுவப்பட்ட முடிபாகும். வேளிர் உழுவித்தோருள் அடங்குவர் என்பதையும்; ஆய்வேள், பாரிவேள், நன்னன் வேள், வேள்ஆவி, வேள்எவ்வி ஆகியோர் வேளாளர் என்பதையும் விரித்துரைத்துள்ளார் மு.இராகவையங்கார் (வேளிர் வரலாறு, ப.1-27).

உ.வே.சாமிநாதையர் தனது 1935ம் ஆண்டைய புறநானூற்றுப் பதிப்பில் உழுவோர், உழுவித்தோர் ஆகிய இருவகை வேளாளர் இருந்தனர் என்கிறார் (புறம்.ப.68). 1923ம் ஆண்டைய பதிப்பில் ஆய்வேளையும் வேள் எவ்வியையும் 'வேளாளருள் உழுவித்து உண்போர்' என எடுத்துரைக்கிறார் (புறம்.ப.58&77).

செவ்விலக்கியத்தில் வேளாளர்

புகாரில் வேளாளர்

புகாரை வருணிக்கும் கடியலூர் உருத்திரங் கண்ணனார் அங்கு 'அமரர்ப் பேணி; ஆவுதி அருத்தி; ஆனும் பகடும் ஓம்பி; நான்மறையோர் புகழ்பரப்பி; விருந்து புரந்து; பசும்பதம் கொடுத்துக்; கொடுமேழி நசை உழவர்' வாழ்ந்த வகைமையைக் கூற; பொ.வே.சோமசுந்தரனார் அவரை வேளாண் மாந்தர் என்றே விதந்து கூறுகிறார் (பட்டினப்பாலை அ.194-205).

மதுரையில் வேளாளர்

மதுரைக்காஞ்சி 'அறங்கூறவையம் முதல் கண்ணுள் வினைஞர் வரை பிறரும் சிறியரும் பெரியரும் கம்மியர் குழீஇ நால்வேறு தெருவினும் காலுற நிற்றர' என்கிறது (அ.489-522). மாங்குடி மருதனார் கூறும் நால்வேறு தெருக்கள் முறையே அரசர், அந்தணர், வணிகர், வேளாளர் தெருக்களாம். பொ.வே.சோம சுந்தரனார் அத்தெருக்கள் முறையே புரோகிதர், ஒற்றர், சேனாபதியர், தூதர் முதலியோர்க்குரிய தெருக்கள் என்கிறார் (பத்துப்பாட்டு தொகுதி ІІ ப.159-169). அதே 'நால்வேறு தெரு' என்ற தொடரை அதே மதுரை நகர வருணனைக்கு இளங்கோவடிகள் எடுத்தாண்ட இடத்து (சிலப்பதிகாரம் ஊர்காண்காதை அ.218); 'நால்வேறு தெருக்கள் நான்கு வருணத்தார்க்கு உரியன' எனப் பொருள் தருகிறார். சிலப்பதிகார அடிக்கு அவர் கூறியிருக்கும் பொருளையே மதுரைக்காஞ்சி அடிக்கும் கூறுவதில் இடர்பாடு ஏதும் இல்லை.

வேந்தர் பாடும் வேளாளர்

"வேற்றுமை தெரிந்த நாற்பாலுள்ளும்
கீழ்ப்பால் ஒருவன் கற்பின்
மேற்பால் ஒருவனும் அவன்பாற் படுமே" (புறம்.183)
என்ற ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியனின் கருத்து மேல் வருணத்தாரையும் கீழ்வருணத்தாரையும் குறித்துப் பேசுவது ஆகும். ஔவை சு.துரை சாமிப் பிள்ளை பதவுரையில் மேற் குலத்தான் கீழ்க்குலத்தான் என்று கூறிப் பின் விளக்கவுரையில் 'இது வட ஆரியப் பகுப்பு முறை. தமிழகத்தில்ஞ் என்றும் இருந்ததில்லை' என்கிறார் (புறம். பகுதி 1 ப.400). இக் கொள்கைக்கு மேல்விளக்கம் தேவை ஆகிறது. ஏனெனில் இளங்கோவடிகள் மதுரையில் இருந்த நான்கு வருண பூதங்களை விவரித்த பின்னர் அதே 'நாற்பால்' என்ற சொல்லால் தான் நால்வருணத்தைச் சுட்டுகிறார்.

"நாற்பாற் பூதமும் பாற்பாற் பெயர" (சிலப்பதிகாரம் அழற்படு காதை-108); என்ற அடிக்கு உரையாசிரியர் அனைவரும் நான்கு வருணத்தாருக்கு உரிய பூதம் என்றே பொருள் சொல்லக் காண்கிறோம். இதனால் நான்காம் வருணத்தவராகிய வேளாளர் தமிழகத்தில் காலூன்றி இருந்தமை உறுதி ஆகிறது.

இன்றைய சமூகத்தில் தொகையிலக்கியத்து வேளாளர்

வேளாளருள் ஆந்தைக் கூட்டத்தினர்

வேந்தன் ஒல்லையூர் தந்த பூதப்பாண்டியனின் உற்ற நண்பனாகிய குறுநில மன்னன் 'மன்எயில்ஆந்தை' ஆவான் (புறம்.71). அவனது பெயரில் உள்ள ஆந்தை ஒரு வேளாளர் மரபைக் குறிக்கிறது. குறுநில மன்னர் 'ஓரெயில்' உடையவர் என்பதும் தொகையிலக்கியச் செய்தி ஆகும் (புறம்.338). பிசிராந்தையார், ஓதலாந்தையார், அஞ்சில் ஆந்தையார், சிறைக்குடி ஆந்தையார் ஆகிய புலவோரும் ஆந்தை மரபைச் சேர்ந்தவர் ஆதலால் அப்பெயர் பெற்றுள்ளார். ஈராயிரம் ஆண்டுகட்குப் பின்னரும் கொங்கு வேளாளர் சமூகத்தின் பல கூட்டத்தினருள் ஆந்தைக் கூட்டம் இன்றளவும் செல்வாக்குடன் நிலைத்து உள்ளது.

வேளாளருள் தும்பிக் கூட்டத்தினர்

பெயர் சுட்டப் பெறாத அகனாட்டு அண்ணல் எனும் குறுநிலமன்னன் இயற்கை எய்திய பின் அவனது மனைவி அழுத கோலத்தைப் பாடுகிறார் தும்பிசோகீரனார் (புறம்.249). இப்புலவரின் பெயரில் உள்ள 'சோ' அரணைக் குறிப்பதாகும். இதனால் இவரும் அகனாட்டு அண்ணலின் உறவினராகிய இன்னொரு மன்னர் ஆகிறார். கொங்கு வேளாளருள் தும்பிக்கூட்டம் என்ற பிரிவு இன்றும் வண்டுக் கூட்டம் என்ற பெயரில் அடையாளம் காணப்படுகிறது.

உ.வே.சாமிநாதையரின் 1894ம் ஆண்டைய புறநானூற்றுப் பதிப்பில் இப்பெயரைத் தும்பிசேர்கீரனார் எனக் குறிப்பிடுகிறார் (புறம்-பாடினோர் வரலாறு- ப.7). ஆயினும் பொருள் தெளிவு கிட்டாததால் 1923ல் வெளியிட்ட இரண்டாம் பதிப்பில் 'நிமித்தம் கூறுபவர்' எனும் பொருள்பெற; தும்பி சொகினனார் எனப் பதிப்பித்து; 'தும்பியை நோக்கிச் செய்தி கூறியவர் போலும்' என்கிறார். 'தும்பிசேர்கீரனார்' ஒரு பாடபேதம் எனக் கூறுகிறார்

(புறம்.ப.29). காலத்தால் முற்பட்ட ஓலைச்சுவடிகளில் புள்ளி இருக்காது என்பது குறிப்பிடத் தக்கது. எனவே தும்பி சோகீரனார் என்ற பெயரே பொருளுடன் பொருந்துவதாக உள்ளது. பிரதி எடுத்தவர் 'தும்பிசோகீரனார்' என்ற பெயர்ப் பொருளைப் புரிந்து கொள்ள இடர்பட்டு; ஒரு புள்ளியைச் சேர்த்துத் தும்பிசேர்கீரனார் ஆக்கியதால் பின்னர் அது தும்பிசொகினனார் என மாற்றம் பெற்றுள்ளது.

4.5.0 நெற்பலியும் வேளாளரும்

4.5.1 நள்ளியின் நாட்டில் நெற்பலி

நள்ளி எனும் மன்னனின் நாட்டில் அண்டர் விளைவித்த நெல் காக்கைக்குப் பலியாகத் தர ஏற்றது என உரைக்கும் போது; வேளாளரோடு நெற்பலி தொடர்புடையது ஆகிறது (குறு.210).

வேளாண் மகளிர் கொடுத்த நெற்பலிகள்

பொற்றொடி அணிந்த மகளிர் புறங்கடையில் காக்கைக்கு கொக்கின் உகிரை ஒத்த நெல்லரிசிச் சோற்றை இட்டனர் (நற்.258). 'பொற்றொடி மகளிர்' வேளாளர்குலப் பெண்டிர் ஆவர். ஆட்சி செய்த வேளாளர் பொன்னைச் செல்வமாகப் போற்றிப் பாதுகாத்தனர் (அகம்.372); பொன் அணிகள் அணிந்தனர். இதற்குப் 'பொன்னங் கண்ணிஞ் நன்னன்'- பதிற்.40, 'பொலம்பூண் நன்னன்'- அகம்.199&396, 'பொலம்பூண் திரையன்'- அகம்.340, 'பொலம்பூண் எவ்வி'- அகம்.366, 'பொன்னணிஞ் புன்றுறை'- அகம்.44, 'பொலம் பூண் எழினி'- அகம்.36 ஆகிய பல பாடலடிகள் சான்று ஆகின்றன. ஆதலால் அவரது பெண்டிரும் பொன்னால் அடையாளம் காணும் தகுதி வாய்ந்தவர் ஆகின்றனர். மன்னன் மகளை; 'சுடர்த் தொடிக் கோமகள்' (அகம். 300) என்றே பரணர் அழைக்கிறார். வேள் எவ்வியின் கொடி நுடங்கும் நாட்டு மறுகில் பாண்மகள் வாளை மீனுக்குப் பண்டமாற்றாகச் செந்நெல்லைத் தவிர்த்துப்; பெரிய முத்துக்கள் பதித்த பொன் அணிகலனைப் பெற்ற செய்தி உள்ளது (அகம்.126). எனவே நற்.258 கூறும் நெற்பலி பொற்றொடி அணிந்த வேளாண் மகளிர் செய்ததே.

மதுரையில் மாலையில் இல்லுறை தெய்வத்திற்கு வழிபாடு நிகழ்த்திய வேளாண் மகளிர் நெல்லும் மலரும் தூவி வழிபட்டனர் (நெடு.அ.43). வேளாளர் அல்லாதார் நிகழ்த்திய வழிபாட்டு இடங்களும் முறையும் வேறுபட்டவை. ஊர்மன்றம், பொதியில், கந்துடை நிலை, காடு, கா, துருத்தி, சந்தி, சதுக்கம், புதுப்பூங் கடம்பு, ஆற்றங் கரை, குளக்கரை ஆகிய இடங்களில் பொதுமக்கள் வழிபட்டனர் (திரு.218-226). மணி, சந்தனம், தூபம், விளக்கு, மலர்கள், பொற் கயிறு, முழவு, மயில், கோடரி, பிணிமுகம் ஆகியவற்றை ஏந்திச் சென்று அவர்கள் தொழுத முறையை நல்லந்துவனார் பாடுகிறார் (பரி.8). எனவே நெல்லும் மலரும் தூவி வழிபட்ட மதுரை மகளிர் வேளாண் மகளிரே.

தமிழர் வழிபடு மரபு மாற்றம்

வேளிர் வந்தேறிகள் என ஆய்வாளர் நிறுவியதை முன்னர்க் கண்டோம் (பார்க்க:கரு.எண்4.2). அவர் வந்த பின் நெல்லைத் தூவி வழிபாடு நிகழ்த்தும் வழக்கம் தோன்றியது பற்றி மாங்குடி கிழார் தன் பாடலில் எடுத்துச் சொல்கிறார்.

"கருங்கால் வரகே இருங்கதிர்த் தினையே
சிறுகொடிக் கொள்ளே பொறிகிளர் அவரை என்று
இந்நான்கு அல்லது உணாவும் இல்லைஞ்
ஒன்னாத் தெவ்வர் முன்னின்று விலங்கி
ஒளிறேந்து மருப்பின் களிறு எறிந்து வீழ்ந்தெனக்
கல்லே பரவின் அல்லது

நெல்லுகுத்துப் பரவும் கடவுளும் இலவே" (புறம்.335)

என வேளிர் வருகைக்குப் பின் தமிழகச் சூழல் எப்படியெல்லாம் மாறியது என்று தொகுக்கிறார். வரகு, தினை, கொள், அவரை என்ற நான்கு வகைப் பயிர் செழித்த புன்செய் வேளாண்மையுடன், நெல்லைப் பயிர் செய்யும் நடைமுறை தோன்றியதால்; புன்செய்ப் பயன்களை மட்டுமே உணவாகக் கொண்ட மரபு மாறியது. நெல்லரிசிச் சோறு பொருளாதார மேம்பாட்டின் அடையாளம் ஆனது. இரண்டு வேளையும் வரகுச்சோறே உண்ட பாணர்க்கு அரிசிச் சோறாம் 'அமலை' உண்ணுமளவு பொருள் கொடுத்தமை புகழ் பெறுகிறது (புறம்.34). ஐயூர் முடவனார் நீராகாரத்தை உலையாக ஊற்றிச் சமைத்த; பாதிரிப் பூங்கொத்து மொட்டுகள் இதழ் விரிந்தாற் போலத் தோன்றும் வெண்மையான முரியாத நெல்லரிசிச் சோறுக்கு ஆசைப்படுவது காண்கிறோம் (புறம்.399).

நால்வருணத்தார் வருகைக்குப் பின் நிகழ்ந்த மாற்றங்களை உரைப்பதால் தான் நான்கு பூக்கள், நான்கு பயிர்கள், நான்கு குடியினர் எனப் புலவர் தொகுத்து உரைக்கிறார். வேளாளர் வருகைக்குப் பின் தமிழகத்து மக்களிடையே நிகழ்ந்த வாழ்க்கைப் போராட்டத்தின் பல்வேறு நிலைகளில் வெட்சி முதல் வாகை ஈறாகப் பல அடையாளப் பூக்களின் பயன்பாடு

நடைமுறைக்கு வந்தது. அதனால் தான்; ‘அடலருந் துப்பின்... குரவே தளவே குருந்தே முல்லை என்று இந்நான்கு அல்லது பூவும் இல்லை’ என்கிறார் (மேற்). அதே போக்கில் வீரமரணம் அடைந்தோரின் நடுகல்லைக் கள்ளைப் படைத்து வழிபட்ட பண்பாட்டுடன் நெல்லைத் தூவிக் கடவுளை வழிபடும் முறையும் இணைந்து சிறப்பிடம் பெற்றது எனச் சொல்வது குறிப்பிடத்தக்கது. இதனால் வருணத்தார் வருகைக்குப் பின் திணைமாந்தர் வழிபாட்டு மரபோடு வேளாளர் வழிபாட்டு முறை இணைந்தமை உறுதி ஆகிறது.

ஔவை சு.துரைசாமிப் பிள்ளை 'முல்லை நிலத்துச் சிற்றூரில் வாழும் மக்களது வாழ்க்கைக் கூறுகள்' பற்றிய பாடல் எனக் கூறுவதில் பொருள் தெளிவும் பொருத்தமும் இல்லை (புறநானூறு பாகம் வீவீ, ப.267). ஏனெனில் பாடல்;

"துடியன் பாணன் பொருநன் கடம்பன் என்று
இந்நான்கு அல்லது குடியும் இல்லை" (மேற்.)

என்கிறது. துடியரும் பாணரும் பொருநரும் கடம்பரும் முல்லை நிலத்தில் மட்டுமே வாழ்ந்தவர் இல்லை.

பார்ப்பார், திணைமாந்தர் ஆகியோரது வழிபாட்டு முறை

பார்ப்பனர் வேதமுறைப்படி வழிபட்டனர். அலைவாயிலில் வேதமந்திரங்கள் முழங்கச் செய்த வேள்வியை ஆறுமுகப் பெருமானின் ஒரு முகம் நோக்கிக் கொண்டு இருந்தது (திருமுரு.அ.78-125). ஆவினன்குடியில் நூறு வேள்விகள் செய்து பெருமை பெற்ற இந்திரன் பிற தெய்வங்களோடும் தேவர்களோடும் கந்தர்வரோடும் வந்து வழிபட்டான் (மேற்.126-176). ஏரகத்தில் அறுவகைத் தொழிலும் வழுவாமல்; உயர்குடிப் பிறந்து; பிரமசரியப் பேராண்மை மிகுந்து; முத்தீப் பேணி; இருபிறப்பு உடையவராய்ப்; பூணூல் அணிந்து; ஆறெழுத்து மந்திரத்தை வேதமுறை வழுவாமல் ஓதி; மலர் தூவி; ஈர உடையுடன் உச்சிக் கூப்பிய கைகளோடு பார்ப்பார் வழிபட்டனர் (மேற்.176-189).

திணை மாந்தர் வேலன் வெறியாட்டு நிகழ்த்தி மறி அறுத்துக் குருதிப்பலி கொடுத்தனர். ஊன்புழுக்கு, ஊன்சூடு ஆகியவற்றைப் படைத்து வழிபட்டனர். (நற்.83, 343, 281; அகம்.287, 297; கலி.101, 106, புறம்.199, 260). மறவர் பசுவைப் பலியிட்டுக் குருதியைப் படைத்து வழிபட்டனர் (அகம்.309). பொருநர் போர்முரசுக்கு நிகழ்த்திய வழிபாட்டில் காக்கை வந்து உண்ணும்படிக் குருதி அளைந்த பலியை இட்டனர் (பதிற்.30). வேப்பந்தளிர், பனைமடல், விடை ஆகியன பலிப்பொருட்கள் ஆயினவே (அகம்.138; பரி.17) அன்றி நெற்பலி இல்லை.

எனவே நெற்பலி வேளாளர் வழிபட்ட முறை என்பது உறுதி.

திராவிட நாகரிகமும் பன்மைத் தன்மையும்

திராவிட நாகரிகம் பற்றி ஆய்வு செய்த ஆன்ட்ரே எஃப்.ஜோபர்க் அதன் பன்மைத் தன்மையை தொல்லியல், பண்பாடு, உடற்கூறியல், மொழியியல் ஆகிய பலவற்றை அடிப்படையாகக் கொண்டு நிறுவுகிறார் (Andrae’ F.Sjoberg, 'Who are the Dravidians' p.1- 33, Symposium on Dravidian Civilization- Asian Series of the Center for Asian Studies of the University of Texas at Austin- 1971). முருக வழிபாட்டு முறைகள் இக்கருத்தை உறுதி செய்கின்றன.

முடிவுரை

வெறியாட்டு நிகழ்த்திய வேலனின் தோற்றமும் நகர் வழிபாடு நிகழ்த்தியவன் தோற்றமும் முற்றிலும் மாறுபட்டுக் காணப் படுகின்றன. நகர்வழிபாட்டில் குறமகள் தெய்வமேறி ஆடுகிறாள். வேளாளர் வரவால் தமிழக வழிபாட்டு முறையில் ஏற்பட்ட மாற்றத்தை நகர் வழிபாட்டில் நக்கீரர் பதிவு செய்கிறார். சுற்றத்தோடு சேர்ந்து கள்ளருந்திப் பெண்டிரோடு குரவையாடிப் பாடி வழிபடும் வேலன் வெறியாட்டுடன்; செந்நூல் காப்புக்கட்டி; வாயினின்று ஓசை எழாமல்; அரிசியும் பொரியும் தூவி வணங்கும் நகர் வழிபாடு உறழ்ந்து காட்டப்பட்டுள்ளது. பண்டு தமிழகத்தில் திணைமாந்தர், வேளாளர், பார்ப்பார், ஆகியோர் வேறுபட்ட வழிபாட்டு முறை இருந்தும் தமிழால் ஒன்றுபட்டு வாழ்ந்த பன்முகத் தன்மை திருமுருகாற்றுப்படையில் வெளிப்படுகிறது.

....

துணைநூற்பட்டியல்

Aingurunooru. (2009). kazhaka veliyeedu, chennai.

Akanaanooru- kalirriyaanai nirai. (2009). kazhaka veliyeedu, chennai.

Akanaanooru- manimidai pavalam. (2007). kazhaka veliyeedu, chennai.

Akanaanooru niththilakkovai, kazhaka veliyeedu, chennai. 2008

Andrae F.Sjoberg- 'Who are the Dravidians', p.1- 33, Symposium on Dravidian Civilization- Asian Series of the Center for Asian Studies of the University of Texas at Austin. (1971).

Chilapathikaaram, Po.Ve.Somasundaranar- commentator, (1975). Chennai: Kazhaka veliyeedu

Kaliththokai, (2007). Chennai: kazhaga veliyeedu

Kazhakath Thamizhakaraathi, 19th edition, Chennai: Kazhaka veliyeedu, (2004).

Kurunthokai. (2007). kazhaka veliyeedu, chennai.

Narrinai. (2007). kazhaka veliyeedu, Chennai.

Paripaadal, Po.ve.Somasuntharanar, (commentator), Chennai: kazhaka veliyeedu, (2007).

Paththuppaattu thokuthi l, (2007). Chennai: Kazhaka veliyeedu

Paththuppaattu- part ii. (2008). kazhaka veliyeedu, chennai.

pathirruppaththu. (2007). kazhaka veliyeedu, chennai.

Puranaanooru, U.Ve.Saaminaathaiyar (editor), 1894. V.N.Jubilee achchukkoodam, Chennai.

Puranaanooru, u.ve.saaminaathaiyar (editor), 2nd edition, 1923. Commercial achchukkoodam, Chennai.

Puranaanooru, u.ve.saaminaathaiyar (editor), 3rd edition, 1935, La journal press, Chennai.

Puranaanooru part l&ll, Auvai Chu.Duraisamippillai- commentator, (2007). Chennai: kazhaka veliyeedu

Rakavaiyangar,Mu., Velir varalaaru, (1913). Maduraith Thamizhch Changam: Centhamizh pirasuram

Thamizh Nikandukal, (1999). Chennai: Kazhaka veliyeedu.

Thirumakal Thamizhakaraathi, (2002). Chennai: Thirumakal nilaiyam